**செ.வெ.எண்:181** **நாள்:17.03.2018**

திருநெல்வேலி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலம் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே பயன்பெற்று வரும் பயனாளிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டையை புதுப்பித்து வழங்கிடவும் மற்றும் புதிய அட்டை வழங்கிடவும் போக்குவரத்து கழகத்துடன் இணைந்து 20.03.2018 முதல் 22.03.2018 வரை காலை 10.00மணி முதல் மதியம் 4.00மணி வரை மூன்று நாட்களுக்கு பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலை எதிரில் உள்ள பிளாரன்ஸ் சுவேன்சன் காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளியில் வைத்து முகாம் நடைபெற உள்ளது. முகாமில் கலந்து கொள்ளும் நபர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

1. பழைய பேருந்து பயண அட்டை
2. மாற்றுத்திறனாளி அடையாள அட்டை நகல் -2
3. ஆதார் கார்டு நகல் -2
4. குடும்ப அட்டை நகல் -2
5. பாஸ்போர்ட் சைஸ் போட்டோ -4
6. பணிச்சான்று முத்திரையுடன் (பார்வையற்றோர் நீங்கலாக)

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி